திரு. கா.பூ. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாய் கிராமமான பஞ்சப்பள்ளி கிராமத்திற்கு இந்த நீர் ஊற்றிலிருந்து தண்ணீர் அளிக்கப்படுவதில்லை. ஆகவே, பஞ்சப்பள்ளி கிராமத்திற்கு இந்தத் திட்டத்தின்கீழ் தண்ணீர் அளிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இதைப்பற்றி பரிசீலனை செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் வெ. புருஷோத்தமன்.

டாக்டர் வெ. புருஷோத்தமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சின்னாறு அணை பக்கத்திலுள்ள பஞ்சப்பள்ளி கால்வாய் மூலமாக என்னுடைய தொகுதியிலுள்ள பாப்பாரப்பட்டி பேரூராட்சி பகுதி வழியாகத்தான் தர்மபுரிக்கு குடிதண்ணீர் சென்று கொண்டிருக்கிறது. ஒரு கிளைக் கால்வாய் மூலம் 20,000 மக்கள் தொகை கொண்ட பாப்பாரப்பட்டி பேரூராட்சிக்கு குடிதண்ணீர்ப் பிரச்சினையை நிரந்தரமாக தீர்வுகாண அமைச்சர் அவர்கள் கருணையோடு பரிசீலனை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபற்றித் தனியாகக் கேள்வி போடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 332, திரு. நா.சா. பழனிசாமி, மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

332—

நிலவள வங்கிகள் மூலம் ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டத்தின்கீழ் ஜாமீன் இல்லாக் கடன்.

* *11096* **திரு. நா.சா. பழனிசாமி:**

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

நிலவள வங்கிகள் மூலம் ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டத்தின்கீழ் ஜாமீன் இல்லாக் கடன் கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

1993 ஏப்ரல் 13]

நிலவள வங்கிகள் ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டத்தின்கீழ் ரூ. 10,000 வரை மத்திய காலக் கடன்கள் மட்டும் பிணையம் (Security) இல்லாமல் வழங்க வழிவகைகள் செய்யப்பட்டுள்ளது. அவ்வினங்களில் அக்கடன்கள் மூலம் பெறும் அசையும் பொருட்களை (Movable assets) ஈடுகாட்டும் உடன்படிக்கைப் பத்திரம் (Hypothecation Deed) தந்தால் மட்டுமே போதுமானது என்பதைக் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. நா.சா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப் பகுதிகளில் ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டத்தின்கீழ் வறுமைக்கோட்டிற்குக்கீழே வாழ்கிற மக்களுக்கு ஆடு வாங்கவும், பெட்டிக்கடைகள் வைக்கவும், சிறு தொழில்கள் செய்யவும் கடன் கொடுக்கப்படுகிறது. அந்தக் கடன்களை தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளுக்குப் பரிந்துரை செய்கிறார்கள். அந்த தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் அதை ஏற்று பெரும்பாலும் கடன் கொடுக்கத் தயக்கம் காட்டுகின்றன. இந்தச் சூழ்நிலையில் நமது அரசு அறிவிக்கும் இந்தக் கடன் திட்டங்களை இப்போது நிலவள வங்கிகள் மூலம் கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே விவசாயத்தையொட்டிய துணைத் தொழில்களுக்கு பால்பண்ணை, கோழி வளர்ப்பு, ஆடு வளர்ப்பு, வண்டி மாடுகள் வாங்குதல் போன்ற பல தொழில்களுக்கு இப்போது மத்திய காலக் கடன்களைக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். அதற்காக அரசு ஆறு கோடி ரூபாய் அளவுக்கு உத்தரவாதமும் அளித்துள்ளது. கடன் கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. நா.சா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஐ.ஆர்.டி.பி. மூலம் கொடுக்கப்படும் சிறுகடன்கள் மத்திய காலக் கடன்களாகக் கொடுக்கப்படுவதில்லை. அவற்றை அடுத்த ஆண்டே கட்டவேண்டிய குறுகிய காலக் கடன்களாகத்தான் கொடுத்து வருகிறார்கள். அது பண்ணைக்கு ஈடுகாட்ட வேண்டிய அளவுக்கு சொத்து இல்லாத ஏழையெளிய மக்களுக்கு, வறுமைக்கோட்டிற்குக் கீழே வாழும் மக்களுக்கு கொடுக்கப்படும் கடன்களுக்கு, ஜாமீன் இல்லாமல், அந்த குறுகிய காலக் கடன்களைக் கொடுக்க நிலவள வங்கிகள் முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது நிலவள வங்கிகள் குறுகிய காலக் கடன்களைத் தருவதில்லை. அவற்றை தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகள் தந்து கொண்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் கேட்பதைப்போல நிலம் இல்லாத விவசாயக் கூலிகளுக்கு கடன்

கொடுக்க இப்போது வழிவகை செய்திருக்கிறோம். அவர்கள் நிலத்தை அடகு வைக்கத் தேவையில்லை. அவர்கள் எந்தப் பொருளை வாங்குகிறார்களோ அந்தப் பொருளுக்கு மட்டும் ஈடுகாட்டுகிற அடமானம் (movable assets) இருந்தால் போதும் என்று வைத்திருக்கிறோம். எனவே, ஏழைகளுக்குக் கடன் கொடுப்பதற்கு இதிலே வசதியாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. பி. ராஜு.

திரு. கே.பி. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலவள வங்கிகளில் ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டத்தின்கீழ் ஆடு வளர்ப்பதற்கும், சிறு தொழில்கள் செய்வதற்கும் கடன் வழங்குகிறார்கள். அப்படி வழங்குகிறபோது அதைப் பெருவாரியாக ஏழை மக்கள் தான் வாங்குகிறார்கள். அதாவது வசதியில்லாதவர்கள், ஆதரவற்ற விதவைகள் போன்றவர்கள் தான் வாங்குகிறார்கள். அவர்களிடம் ஜாமீன் தொகை கேட்டால் அவர்கள் எங்கே போவார்கள்? ஆகவே ஜாமீன் கேட்டால் அவர்களால் கொடுக்க முடியாது-

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியாகக் கேட்க வேண்டும்.

திரு. கே.பி. ராஜு: அதைத்தான் கேட்கிறேன். ஜாமீன் கொடுக்கமுடியாது. ஆகவே இப்போது தேசிய வங்கிகளில் சட்டமன்ற உறுப்பினர்கள் சொன்னால்கூட கடன் கொடுப்பது கிடையாது. அவர்கள் சௌகரியத்திற்கு கொடுத்துக் கொண்டு இருக்கிறார்கள். எனவே சட்டமன்ற உறுப்பினர்கள் சொன்னாலாவது கொடுக்கிற நிலையை அரசு ஏற்படுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10.40

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்கள் சொல்லாமலேயே ஏற்கனவே கொடுத்துக் கொண்டிருக்கிறோம். ஜாமீன் இல்லாமலேயே கொடுத்துக்கொண்டிருக்கிறோம். எந்தப் பொருளை அவர்கள் வாங்குகிறார்களோ-பால் பண்ணை என்று சொன்னால், அந்தப் பால் பண்ணையை மட்டும் அல்லது மாடு வாங்கினால் அந்த மாட்டை மட்டும்- அந்தப் பொருளை மட்டும் அவர்கள் ஹைபோதகேசன் கொடுத்தால்போதும். வேறு நிலங்களோ, வேறு சொத்துக்களோ தேவையில்லை என்றுதான் இப்போது இருக்கிற முறை இருக்கிறது. ஆகவே, இதனாலே யாரும் பாதிக்கப்பட மாட்டார்கள். நிலம் இல்லாத ஏழை விவசாயிகளுக்கு இது வசதியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1993 ஏப்ரல் 13]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் ச. ஆரோக்கியசாமி.

டாக்டர் ச. ஆரோக்கியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகரப் பகுதி இளைஞர்களுக்கு தொழில் தொடங்கக் கொடுக்கப்படும் இந்த 'சுபே' லோன் நம்முடைய மத்தியக் கூட்டுறவு வங்கிகளில் வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி நிலவள வங்கிகளைப் பற்றியது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் தனிக்கேள்வி போடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலவள வங்கிகளில் சாதாரண கிராம ஏழைகளுக்குக் கடன் வழங்குவது குறித்து நான் மகிழ்ச்சி அடைகிறேன். அதே நேரத்தில் நிலவள வங்கிகளில் கடன் வழங்குவதில் பல்வேறு வகையான சிரமங்கள் இருக்கின்றன. அதாவது நிலத்தை சப்-ரிஜிஸ்திராரிடம் பதிந்தால், அதற்கு இ.சி. எடுக்க வேண்டும் என்று சொல்கிறார்கள், இன்னும் பல தொகைகளைக் கட்ட வேண்டும் என்று சொல்கிறார்கள். அதையெல்லாம் குறைத்து, சற்று சுலபமாக கியாரண்டி இருக்கிறது என்ற அடிப்படையில் அந்தக் கடனை வழங்க அரசு முன்வருமா? அதேநேரத்தில், நீண்ட பல வருடங்களாக நிலவள வங்கிகள் வழவழ வங்கிகளாக இயங்கிக் கொண்டிருக்கின்றன. ஆகவே, புரட்சித் தலைவியினுடைய ஆட்சியில், நிலவள வங்கிகள், நிலவள வங்கிகளாக இயங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் துரிதமாகச் செயல்படுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கியாரண்டி இல்லாமலேயே கொடுப்பதற்குத்தான் இப்போது நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம். வேறு யாருடைய கையெழுத்தும் தேவையில்லை. அவர்கள் எந்தப் பொருளை வாங்குகிறார்களோ அதை மட்டும் நமக்கு அடமானமாக வைத்தால் போதும் என்று தான் கேட்டு இருக்கிறோம். அதைத் தவிர, வீடோ, நிலமோ, எதுவும் தேவையில்லை. மாண்புமிகு உறுப்பினர் சிங்காரம் அவர்கள் சொல்வதைப் போல, நிலவள வங்கிகள் கொஞ்சம் நிதானமாகத்தான் செயல்பட்டுக் கொண்டிருந்தாலும், இப்போதுதான் முடுக்கிவிட்டுக் கொண்டிருக்கிறோம். ஆனால் இன்னும் வேகம் போதவில்லை என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். நேற்றைக்குக்கூட

நம்முடைய உறுப்பினர் நா.சா. பழனிசாமி அவர்களும், அவர்களுடைய தலைவர் செல்லமுத்து அவர்களும் சந்தித்தபோது, இந்த நிலவள வங்கிகளினுடைய கடனையே, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியிலே மாற்றிக் கொடுத்தால் என்ன என்று கூட ஒரு யோசனையைச் சொன்னார்கள். இன்னும் அதைப் பற்றி அரசு பரிசீலனை செய்யவில்லை. ஆனாலும் இன்னும் வேகமாக நடவடிக்கை எடுப்பதற்கு நிலவள வங்கிகளுக்கு உத்தரவிடப்பட்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சோ. பாலகிருஷ்ணன்.

திரு. சோ. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலவள வங்கிகளில் விவசாயத்திற்கு மட்டுமல்லாமல், சிறு தொழில்களுக்குக்கூட இப்போது கடன் கொடுக்கின்ற நல்ல திட்டத்தை உருவாக்கியிருக்கிறார்கள். இதிலே ஒரு குறை என்னவென்றால், நம்முடைய நிலவள வங்கிகளில் இருக்கின்ற ஊழியர்கள் நிரந்தர ஊழியர்களாக, அங்கேயே எந்தவிதமான மாறுதலும் செய்யப்பட முடியாத ஊழியர்களாக இருக்கிற காரணத்தால், நம்முடைய நல்ல திட்டங்கள் எல்லாம் மக்களுக்குப் போய்ச் சேருவதில் ஏராளமான தடங்கல்கள் இருக்கின்றன. ஆகவே, இந்த நிலவள வங்கிகளில் இருக்கின்ற ஊழியர்களை நிலவள வங்கிகளுக்குள்ளேயே 3 வருடத்திற்கு ஒரு முறை மாற்றுகின்ற ஒரு சூழ்நிலையை நம்முடைய அரசு உருவாக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினை ஏற்கனவே அரசின் கவனத்திற்கு வந்து, அவர்களுக்கு தனியாக காமன் கேடர் உருவாக்குவதற்கு ஒரு குழுவை நியமித்து, அது சீக்கிரத்திலேயே அறிக்கையை சமர்ப்பிக்க இருக்கிறது. அது வந்தபிறகு, அவர்களை அங்கிருந்து மாற்றுவதற்கு உரிய வழிவகை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 333, திரு. வி.கே. லட்சுமணன், மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

333—

மத்திய அரசு அறிமுகப்படுத்தும் கூட்டுறவுச் சட்டம்.

20016 திரு. வி.கே. லட்சுமணன்:

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மைய அரசு அறிமுகப்படுத்த இருக்கிற கூட்டுறவுச் சட்டத்தின் மாதிரி நகல் தமிழக அரசுக்கு வந்துள்ளதா?